සියලුම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

Geography

වයඹ පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව
வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்
Provincial Education Department (NWP)

மூன்றாம் தவணைப் பரீட்சை – 2025

தரம் - 8	புவியியல்

சுட்டெண் :

நேரம் : 2 மணித்தியாலம்

பகுதி – I

- **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக**
- **01 தொடக்கம் 05 வரையான வினாக்களுக்குறிய பொருத்தமான விடையை அடைப்புக்குறிக்குள் இருந்து தெரிவு செய்தி எழுதுக.**

01. ஞாயிற்றுத் தொகுதியில் ..... உலோகப்பொருட்களால் உருவாக்கப்பட்ட பாறைகளை உள்ளடக்கிய கோள்.
(செவ்வாய் / நெப்தியூன் / ஏரிஸ்)

02. புவியை விட 10 மடங்கு பெரிய கோள் ..... ஆகும். (சனி / வியாழன் / யுரேனஸ்)

03. தென் ஆசிய வலயத்தில் அதிகமாக நிழவுவது .....காலநிலை ஆகும். (இடை வெப்பம் / குளிர் / அயன)

04. உயிர் பல்வகைமை உயர் மட்டத்தில் காணப்படும் ..... கரையோர நிலத்தோற்றத்திற்கு உரிய தனித்துவமான சூழல் தொகுதியாகும்.
(சமவெளி / கண்டல் / புல்வெளி)

05. இடவிளக்கப் படம் ஒன்றில் காட்டப்பட்டுள்ள தகவல்களை ஆராய்வதற்கு மிகப் பொருத்தமானது ..... ஆகும்.
(தலைப்பு / குறியீடு / அளவுத்திட்டம்)

- **06 தொடக்கம் 10 வரையான வினாக்களுக்கு பொருத்தமான விடையை இடைவெளியில் எழுதி பூரணப்படுத்துக.**

06. வளி மண்டலத்தின் மேற் பகுதியில் அமைந்திருக்கும் ஓசோன் படை ஞாயிற்று கதிர்வீச்சில் இருந்து வரும் .....கதிர்களை கட்டுப்படுத்துகின்றது.

07. தென்ஆசிய வலயம் மத்திய கோட்டிலிருந்து வட அகலக்கோடு .....வரை பறந்துள்ளது.

08. இமயமலைத்தொடரின் வெப்பமான காலநிலை பண்பு நேபாளத்தின் ..... பள்ளத்தாக்கிலும் காணப்படுகிறது.

09. ஞாயிற்றுத்தொகுதி உருவாகும் போது விடுபட்ட, உடைவடைந்த பாறைத் துண்டுகள் .....எனப்படுகிறது.

10. நீரியல் வட்டத்தின் போது நீரானது பூவி மேற்பரப்பிற்கும் வளிமண்டலத்துக்கும் இடையில் .....சுழல்கின்றது.

- **11 தொடக்கம் 15 வரையான வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்கள் சரியாயின் √ எனவும் பிழையாயின் × எனவும் அடையாளம் இடுக.**

11. பூமியின் மொத்த நிலப்பரப்பில் 71 வீதம் நீரினால் மூடப்பட்டுள்ளது. (.....)

12. அமெரிக்காவின் நாசா நிறுவனம் புவியை விட 10 மடங்கு பெரிய கோள் இருப்பதாக கண்டுபிடித்துள்ளது. (.....)

13. புவி மேற்பரப்பில் காணப்படும் பல்வேறு அம்சங்களை இடவிளக்க படத்தின் மூலம் காட்டலாம். (.....)

14. கிராமிய நிலத்தோற்றத்தில் கைத்தொழில் மற்றும் சேவை வசதிகள் விருத்தியடைந்திருக்கும். (.....)

15. புளூட்டோ ஞாயிற்றுத் தொகுதிக்குறியதாகும் எனினும் அது ஞாயிற்று தொகுதியை சேர்ந்த பிரதான கோள் அல்ல. (.....)

- **16 தொடக்கம் 20 வரையான வினாக்களுக்கு கொடுக்கப்பட்டுள்ள விடைகளுள் சரியான விடையை தெரிவு செய்து அதன் கீழ் கோடிடுக.**

16. புவிக்கு மிக அண்மையில் அமைந்துள்ள கோள் இரண்டு.
    1. வியாழன், செவ்வாய்
    2. புதன், வெள்ளி
    3. வெள்ளி, செவ்வாய்
    4. செவ்வாய், புதன்

17. இலங்கையின் 1: 50,000 இட விளக்கப்படத்தில் சமவுயரக் கோட்டை பயன்படுத்தி காட்டப்படும் அம்சம்
    1. நதி
    2. சரணாலயம்
    3. காடு
    4. மலைத்தொடர்

18. வளிகோளத்தில் அதிகமாகவும் குறைவாகவும் உள்ள வாயுக்களை சரியாக காட்டும் விடை எது.
    1. ஒட்சிசன் மற்றும் ஓசோன்
    2. நைதரசன் மற்றும் ஓசோன்
    3. ஒட்சிசன் மற்றும் காபனீரொட்சைட்
    4. நைதரசன் மற்றும் ஆகன்

19. பின்வரும் பண்புகளில் மலைப்பாங்கான நிலத்தோற்றத்தின் பண்பை காட்டும் விடை எது.
    A. கிழங்குவகை, தேன், வேட்டையாடிய மிருகங்களை உணவாக உட்கொள்ளல்.
    B. பண்பாட்டு அம்சங்கள் மாற்றமடையாமல் காணப்படல்.
    C. பழங்குடி மக்கள் வாழ்கின்றனர்
    D. கால்நடை வளர்ப்புகளாக அதிகமான புல்நிலங்கள் பயன்படுத்தப்படும்
    E. தொடரலை நிலத்தை காணலாம்

    1. A மற்றும் D
    2. A மற்றும் C
    3. B மற்றும் D
    4. A மற்றும் E

20. கரையோர நிலத்தோற்றத்தில் தெளிவாக காணமுடியாத பௌதீக அம்சம்.
    1. மணற்றடை
    2. களப்பு
    3.குடா
    4. காள்வாய்

(2×20=40 புள்ளிகள்)

பகுதி II

கவனிக்க

- முதலாம் வினா உட்பட மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடை எழுதுக.
- முதலாம் வினா கட்டாயமானது.

1. (அ) கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையாளிக்க இப்படத்தை பயன்படுத்துக.



I. படத்தில் சமவுயர கோடுகளின் அளவுகளை 20M அளவுகளில் அடையாளமிடுக. (புள்ளி 1)

II. 180M ஐ விட உயரமான பிரதேசத்தை கபில நிறத்தால் நிறம் தீட்டுக. (புள்ளி 1)

III. 100M சமவுயர கோட்டுக்கு சமாந்தரமாக இடது பக்கமாக A தர வீதியொன்றை வரைந்து காட்டுக. (புள்ளி 2)

IV. படத்தின் பிரதான நதியின் மத்தியில் மாகாண எல்லையை குறித்துக் காட்டுக. (புள்ளி 2)

V. படத்தில் A-B மற்றும் C-D இனால் காட்டப்படும் தரைத்தோற்ற அம்சங்கள் இரண்டை பெயரிடுக. (புள்ளி 2)

(ஆ) கீழே காணப்படும் தென் ஆசிய வரைப்படத்தை பயன்படுத்தி கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடைதருக.

I. A எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நாட்டிலுள்ள மலைத்தொடர் ஒன்றை பெயரிடுக. (புள்ளி 1)

II. B எழுத்தினால் காட்டப்பட்டுள்ள நாட்டின் தலைநகரம் யாது. (புள்ளி 1)

III. C எழுத்தால் காட்டப்பட்டுள்ளது ஒரு கடலாகும் அதனை பெயரிடுக. (புள்ளி 1)

IV. D எழுத்தால் காட்டப்பட்டுள்ள நாட்டின் பிரதான பொருளாதார நடவடிக்கை யாது. (புள்ளி 1)



(இ) ஞாயிற்று தொகுதி பற்றிய அறிவை பயன்படுத்தி ABC மற்றும் D என்பவற்றால் குறிப்பிடப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.

A. மேற்பரப்பு, வெப்பநிலை அதிகமாக உள்ள கோள் ……..

B. அதிகமான உப கோள்களை கொண்டுள்ள கோள் ……..

C. ஞாயிற்றுத் தொகுதியில் உள்ள மிக சிறிய கோள் ……..

D. சுற்றுகைக்கு அதிகமான காலம் எடுக்கும் கோள் …….

(புள்ளி 4)

2. I. கீழே A B C D எழுத்தால் காட்டப்பட்டுள்ள கோள்களை இனம் கண்டு பெயரிடுக. (புள்ளி 2)



A B C D

II. (a) B கோளுக்கு வழங்கப்பட்டுள்ள இன்னும் ஒரு பெயரை எழுதுக (புள்ளி 1)
(b) C கோளுக்குரிய உப கோள்கள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)

III. (a) A மற்றும் D கோள்களின் பொதுவான பண்புகள் இரண்டை எழுதுக. (புள்ளி 2)
(b) கோள்களுக்கும் நட்சத்திரங்களுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் இரண்டை எழுதுக. (புள்ளி 2)
(c) ஞாயிற்றுத்தொகுதியின் முதன்மையாக உள்ள சூரியனின் பண்புகள் இரண்டைத் தருக. (புள்ளி 2)

3. I. புவிச்சுழற்சி என்றால் என்ன? அதன் பயன் ஒன்றை எழுதுக. (புள்ளி 2)

II. a. பூவிச்சுற்றை என்றால் என்ன? (புள்ளி 1)
b. பூவிச்சுற்றுகையினால் ஏற்படும் விளைவுகள் இரண்டை எழுதுக. (புள்ளி 2)

III. a. இங்கே காணப்படும் படத்தில் A, B மற்றும் C யினால் காட்டப்படும் அகலக்கோடுகளையும், D இனால் காட்டப்படும் நெடுங்கோட்டையும் பெயரிடுக. (புள்ளி 2)



b. புவியானது மனிதனுக்கு சாதகமான ஒரு கோளாக இருப்பதற்கான காரணங்களை சுருக்கமாக விளக்குக. (புள்ளி 4)

4. புவியின் பிரதான நான்கு பருவங்கள் படத்தில் A B C D இனால் காட்டப்பட்டுள்ளன.



A B C D

I. A மற்றும் C யினால் காட்டப்படும் பருவங்களை பெயரிடுக. (புள்ளி 2)

II. B எழுத்தால் காட்டப்பட்டுள்ள பருவத்தை பெயரிடுக. அப்பருவத்தின் விசேட பண்புகள் மூன்றை எழுதுக. (புள்ளி 3)

III. a. D எழுத்தால் காட்டப்படும் பருவத்தை பெயரிட்டு, அது வடவரைக் கோளத்திற்கு ஆரம்பமாகும் காலத்தை குறிப்பிடுக. (புள்ளி 2)
b. D பருவத்தின் விசேட பண்புகள் இரண்டை எழுதுக. (புள்ளி 2)

c. D பருவத்தின் ஆரம்பமானது மனித செயற்பாடுகளை பாதிக்கும் முறையை இரு காரணங்கள் ஊடாக விளக்குக. (புள்ளி 2)

5. I. தென் ஆசியாவின் நிலத்தோற்றங்கள் இரண்டு A மற்றும் B ஆகிய எழுத்துக்களால் காட்டப்பட்டுள்ளது. அதனை பெயரிடுக. (புள்ளி 2)



A



B

II. a. இங்கே A எழுத்தால் காட்டப்பட்டுள்ள தென் ஆசியப் பிரதேசம் ஒன்றை குறிப்பிடுக. (புள்ளி 1)

b. நீர் இங்கு A இனால் பெயரிட்ட நிலத்தோற்றத்தின் விசேட பண்புகள் இரண்டை எழுதுக. (புள்ளி 2)

III. a. தென் ஆசிய நாடுகளின் கூட்டமைப்பில் உள்ள மத்திய ஆசியாவைச் சேர்ந்த நாடு எது? (புள்ளி 1)

b. இச்சங்கத்தில் அங்கத்துவம் பெறுகின்ற தென் ஆசியாவின் தீவுகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)

c. தென் ஆசியா வலயம் தனித்துவமான புவியில் பகுதியாக இருப்பதற்கான காரணங்கள் இரண்டை சுருக்கமாக விளக்க. (புள்ளி 3)

6. I. கைத்தொழில் மற்றும் நகர நிலத்தோற்றத்தில் காணக்கூடிய பண்புகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)

II. நகர நிலத்தோற்றத்தின் பல்வேறு தோற்றங்கள் A B C ஆகியவற்றால் காட்டப்பட்டுள்ளன அவற்றை இனம்கண்டு பெயரிடுக. (புள்ளி 3)



A



B



C

III. a. தென் ஆசியாவுக்குறிய அதிக சனத்தொகை கொண்ட நகரங்கள் இரண்டை (பம்பாய் தவிர) பெயரிடுக. (புள்ளி 2)

b. இலங்கையின் கொழும்பு நகரத்தில் காணக்கூடிய பிரச்சினைகள் இரண்டை சுருக்கமாக விளக்குக. (புள்ளி 4)

7. I. பள்ளத்தாக்கு நிலத்தோற்றம் காணப்படும் பின்வரும் நாடுகளில் காணப்படும் நதிப் பள்ளத்தாக்கு ஒவ்வொன்றை குறிப்பிடுக.

a. பாக்கிஸ்தான்

b. இலங்கை (புள்ளி 2)

II. கங்கை நதி பள்ளத்தாக்கில் காணக்கூடிய தரைத்தோற்ற அம்சங்கள் மூன்றை குறிப்பிடுக. (புள்ளி 3)

III. a. கங்கை நதி பள்ளத்தாக்கில் தாழ் கழிமுகம் பகுதியின் முக்கிய பயிர் யாது? (புள்ளி 2)

b. கங்கை நதி பள்ளத்தாக்கின் மத்திய பகுதியில் இடம்பெறும் விவசாய நடவடிக்கைகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)

c. கீழ் கங்கை பள்ளத்தாக்கு பகுதியில் எதிர்நோக்கப்படும் பிரச்சினைகள் இரண்டை குறிப்பிடுக. (புள்ளி 2)

8. I. சமவுயரக் கோடுகள் என்றால் என்ன? (புள்ளி 2)

II. படத்தில் A B C இனால் காட்டப்படும் தரைத்தோற்ற அம்சங்களை பெயரிடுக. (புள்ளி 3)



A B C

III. a. **1 : 50 000** இடவிளக்க படத்தில் காட்டப்படும் பண்பாட்டு அம்சங்கள் இரண்டை எழுதுக. (புள்ளி 2)

b. குளம், வீதி, கால்வாய் என்பவற்றை உரிய குறியீடுகளால் வரைந்து காட்டுக. (புள்ளி 2)

c. இடவிளக்கப்படமொன்றினால் கிடைக்கக்கூடிய நன்மைகள் இரண்டை குறிப்பிட்டு விளக்குக. (புள்ளி 2)

வடமேல் மாகாணக் கல்வித் திணைக்களம்

மூன்றாம் தவணைப் பரீட்சை –2025 **பாடம்** புவியியல்

Geography விடைப்பத்திரம் - தரம் 8

பகுதி – I

1. செவ்வாய்	6. புறஊதா	11.√	16 – 3
2. வியாழன்	7. 38 பாகை	12.×	17 – 4
3. அயன	8. டெராய்	13. √	18 – 2
4. கண்டல்	9. குறுங்கோள் / உருப்போலி	14. ×	19 – 2
5. குறியீடு	10. வட்டவடிவில்	15. √	20 - 4

01. (அ) I. 20 மீட்டர்களாக குறிப்பிடப்பட்டிருந்தால். புள்ளி வழங்கவும்
II. கபில நிறத்தால் நிறம் தீட்டப்பட்டு இருந்தால். புள்ளி வழங்கவும்
III. வீதி சிவப்பு நிறத்தால் வரையப்பட்டால் புள்ளி வழங்கவும்
IV. பொருத்தமான குறியீட்டை பயன்படுத்தி இருந்தால் புள்ளி வழங்கவும்
V. A-B கணவாய் C-D பள்ளத்தாக்கு

(ஆ) I. சுலைமான்
II. கத்மண்டு
III.அரேபியா கடல்
IV. மீன்பிடி கைத்தொழில் அல்லது சுற்றாடல் கைத்தொழில்

(இ) I. வெள்ளி
II. வியாழன்
III. புதன்
IV. நெப்த்தியூன்

02. I. A. வியாழன்
B. வெள்ளி
C. செவ்வாய்
D. சனி
II. பெறபோஸ், டோமோஸ்
III. a) புறக் கோள்களாகும், எரிகற்களை கொண்ட வலயத்திற்கு வெளியே அமைந்துள்ளன, உலோக பொருட்களால் உருவாக்கப்பட்டது
b) கோல்கள் - சூரியனில் இருந்து பெறுகின்ற ஒளியை தெறிப்படைய செய்கின்றது, மின்மினி பிரகாசிக்காது
நட்சத்திரம்- ஒளியையும் வெப்பத்தையும் தரும், இரவு வானில் மின்னி மின்னி ஒளிரும்
c) பாட புத்தகம் பக்கம் 37

03. I. பூவி தனது சொந்த அச்சில் சுற்டி அசைவது சுழற்சி
சுழற்சியின் பயன்கள் - இரவு பகல் ஏற்படுதல், பிரதேசங்களுக்கு இடையில் நேர வேறுபாடு
II. a) பூமி சூரியனை சுற்றிவருவது சுற்றுகை எனப்படும்.
b) அகலகோட்டு அடிப்படையில் இரவு பகல் காலங்களில் நாட்கள் வேறுபடும், உயர் அகலக் கோட்டுப் பகுதிகளில் பருவ கால மாற்றங்கள் ஏற்படும்

III. a) A. கடக்கோடு B. மகரக் கோடு
C. ஆட்டிக் வட்டம் D. கிரீன்விச் கோடு
b) உயிர் வாழ்வதற்கு தேவையான வாயுக்களை கொண்டு உள்ளது, நீர் கிடைப்பது, சாதகமான வெப்பநிலை காணப்படல், சுழற்சி சுற்றுகளை இடம் பெறுவது, புவியீர்ப்பு சக்தி

04. I. A. கோட்டை காலம் C இலையுதிர் காலம்

II. B வசந்த காலம்
பனியும் பனிக்கட்டியும் மெதுவாக கரையும், தடைப்பட்ட தாவர வளர்ச்சி மீண்டும் வளரும், பூக்கள் பூத்து பயன் தரும்

III. a) குளிர்காலம் டிசம்பர் மாதம்
b) இரவு காலம் நீண்டு காணப்படும், இலைகள் முழுமையா உதிரும், அநேகமான பகுதிகள் பனியால் மூடப்படும்.
c) அதிக குளிர் காரணமாக மனித நடவடிக்கைகள் மட்டுப்படுத்தப்படும், பனி அதிகமானதால் விவசாய நடவடிக்கைகள் தடைப்படும், சில நாடுகளில் பனிமூட்டம் காரணமா வீதியில் போக்குவரத்து தடைப்படும்.

05. I. A. பாலைவன நிலத்தோற்றம்
B. கிராமிய நிலத்தோற்றம்

II. a) இந்தியாவின் தார் பாலைவனம்
b) மணல் பகுதியை கொண்ட நிலம், அதிக ஆவியாக்கம் நிகழ்தல், 250 மில்லிமீட்டர் குறைவடைந்த வருட மழைவீழ்ச்சி, அதிக கூடிய வெப்பநிலை, அதிக ஆவியாக்கம், வரண்ட காற்று வீசுதல்.

III. A) அப்கானிஸ்தான்
B) மாலைதீவு, இலங்கை
C) பொருத்தமான விடைக்கு புள்ளி வழங்குக

06. I. மிகக் குறைந்த நிலப்பகுதியில் அதிக மக்கள் வாழ்கின்றமை, அதிக அடர்த்தி கொண்ட வீடமைப்புகள், மக்களின் நாளாந்த நடவடிக்கைகள் அதிகம், உயர் மாடி வீட்டுத் தொகுதிகள், கைத்தொழில் மற்றும் சேவைகளின் வளர்ச்சி.

II. A. சேரிப்புற வாழ்க்கை
B. வாகன நெரிசல்
C. வீதியோர மக்கள்

III. A. டில்லி, சென்னை, கொல்கத்தா, இஸ்லாமாபாத், கராச்சி, கொழும்பு
B. இடப்பற்றாக்குறை, சூழல் மாசடைதல், துஷ்பிரயோகம் அதிகரித்தல்.

07. I. A. சிந்து நதி
B. மகாவலி கங்கை

II. தொடர்களை நிலம், பின்னிய ஆறுகள், மியாந்தர், சமவெளிகள், மணற்படிவுகள்

III. A. சனல்
B. நெல், கோதுமை
C. வெள்ளப்பெருக்கு நீர் மாசடைதல்

08. I. நில மேற்பரப்பில் சமமான உயரமுள்ள இடங்களை இணைத்து வரையும் கோடுகள் சமவுயரக் கோடுகள் எனப்படும்

II. A. கூம்பு குன்று
B. மலைத்தொடர்
C. பள்ளத்தாக்கு

III. a) சரியாக குறிக்கப்பட்ட இரு பண்பாடம்சங்களுக்கு புள்ளி வழங்கவும்.
b) சரியாக குறியீடுகளை பயன்படுத்தி வரைந்திருப்பின் புள்ளி வழங்கவும்
c) சுற்றுலாவுக்கு பொருத்தமான பாதையை கண்டு கொள்வதற்கு, கிட்டிய வீதிகளை கண்டுகொள்ள, சுற்றுலா ஹோட்டல்களை கண்டு கொள்வதற்கு.